# சங்க அக இலக்கியங்களில் நீர்வாழ் விலங்குகள்

# Aquatic animals in Sangam Agam Literature

**முனைவர் க. வெள்ளியங்கிரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோயமுத்தூர்.

**Dr K.Velliyangiri,** Assistant Professor, Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar Arts Science Tamil College, Perur, Coimbatore

**DOI : 10.5281/zenodo.7567964**

## Abstract

Sangam literature is an ancient literature that originated in Tamil land. There is a lot of information about people's life, culture and other living things. Through them we can learn about the organisms that live on land and water. The aquatic fauna recorded in the Sanga literature, which is part of the Sanga literature, contains a lot of information about their anatomy and habitat. Aayirai, arel, shrimp, kelira, carp, kolamin, shark, perumin, varal, swordfish and otter are displayed along with their peculiarities. Palatinate literature is a treasure trove of diverse disciplinary ideas. Studies in the field of bioecology are increasing nowadays. Such studies are also beneficial for the global movement. When this kind of research in literature takes place by presenting the ancient literature, one can feel the inheritance of the ancients. In this way the Old Tamil people have recorded the characteristics of the creatures in their environment in their ancient literature, the Sangha Literature. This review article examines aquatic animals, the manner in which they are shot, and records of their habitats, among the aquatic species that constitute the only domestic literature.

## ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்கள் தமிழ் நிலத்தில் தோன்றிய தொன்மைவாய்ந்த இலக்கியங்கள். அவற்றில் மக்கள் வாழ்வியல், பண்பாடு, பிற உயிரின வாழ்வியல் எனப் பரவிக்கிடக்கும் தகவல்கள் ஏராளம். அவற்றின் மூலமாக நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய உயிரினங்களைப்பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியங்களுள் ஒருபகுதியான சங்க அக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நீர்வாழ் விலங்கினங்கள் அவற்றின் உடலமைப்பு வாழிடம் என்ற பல தகவல்களைக் கொண்டமைந்துள்ளன. அயிரை, ஆரல், இறால், கெளிறு, கெண்டை, கொழுமீன், சுறா, பெருமீன், வரால், வாளை ஆகிய மீன்களும் நீர்நாயும் அவற்றின் சில தனித்தன்மைகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**Keywords:** சங்கம், சங்க இலக்கியம், அகப்பாடல்கள், கடல்வாழ் உயிரினங்கள், நீர் வாழ் விலங்குகள், மீன்கள், கயற்கணம், இறால் மீன், அயிரைமீன், பெருமீன்

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கியங்கள் பல்வேறுபட்ட துறைசார்ந்த கருத்துகளின் கருவூலமாக விளங்குகின்றன. உயிரியல் சூழலியல் பின்புலத்திலான ஆய்வுகள் தற்காலத்தில் பெருகிவருகின்றன. இவ்வகை ஆய்வுகள் உலக இயக்கத்திற்குப் பயன் நல்குவனவாகவும் அமைகின்றன. இலக்கியங்களில் இத்தன்மையவான ஆய்வுகள் பழமையான இலக்கியங்களை முன்வைத்து நிகழும்பொழுது தொல் சமுதாயத்தின் மரபறிவினை உணரமுடியும். அவ்வகையில் தொல்தமிழ் மக்கள் தங்கள் சூழலில் வழங்கிவந்த உயிரினங்களின் தன்மைகளைத் தமது தொன்மைவாய்ந்த இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் பதிவுசெய்துள்ளனர். அதன் ஒருகூறான அக இலக்கியங்களில் கானலாகும் நீர்வாழ் உயிரினங்களில் நீர்விலங்குகள், அவை சுட்டப்படும்விதம், அவற்றின் வாழிடம்பற்றிய பதிவுகள் ஆகியவற்றை ஆய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**நீர்வாழ் விலங்குகள்**

நிலத்தில் உயிரினங்கள் வாழ்வதுபோன்று நீரிலும் வாழ்வது அனைவரும் அறிந்ததே. உலகில் நிலத்தின் பரப்பைக் காட்டிலும் நீரின் பரப்பே மிகுதி. அதன் அடிப்படையில் நீர் என்பது நிலத்தைக் காட்டிலும் பரந்துபட்ட வாழிடமாக அமைகின்றது. நீர் வாழிடம் என்பது பரந்துபட்ட கடற்பகுதி எனும் நிலையில் மட்டுமல்லாமல் நிலப்பகுதியில் அமையப்பெற்ற ஆறு, குளம், ஏரி, அணை போன்றவற்றையும் உள்ளடக்கியதாகவுள்ளது. உவர் நீர், நன்னீர் என்ற இருநிலைகளில் நீர்நிலைகளைப் பகுக்கலாம். கடல் உவர் நீரைக் கொண்டது. நிலப்பரப்பில் காணப்படும் ஆறு, குளம், குட்டை போன்றவை நன்நீரைக் கொண்டமைவன. இதன் அடிப்படையில் நீர்விலங்களை நன்னீர் விலங்குகள், உவர்நீர் விலங்குகள் எனப் பகுக்கலாம். நீர்விலங்குகள் என்றதும் நமக்கு முதலில் நினைவிற்கு வருவன மீனினம் எனலாம். ஆனால் நாம் அறியாத எண்ணற்ற உயிரினங்கள் நீரில் வாழ்கின்றன. சங்க அகப்பாடல்களில் நீர்வாழ் உயிரிகளான மீன்கள், நீர்நாய் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன.

**மீன்கள்**

சங்க அகப்பாடல்களில் நன்னீரில் வாழும் மீன்கள் உவர்நீரில் வாழும் மீன்கள் என வாழிடப் பகுப்பின் அடிப்படையிலான இருவகை மீன்களும் சுட்டப்பட்டுள்ளன. அயிரை, ஆரல், இறால், கெளிறு, கெண்டை, கொழுமீன், சுறா, பனைமீன், வரால், வாளை ஆகிய மீனினங்கள் சங்க அகப்பாடல்களில் காணப்படுகின்றன. இம்மீனினங்களில் சிலநன்னீர் உவர்நீர் என இருவகை நீரிலும் வாழும் தன்மையவாய் உள்ளன. இவை மட்டுமின்றி பொதுவாக மீனைக் குறிக்கும் வகையில் சங்க அகப்பாடலடிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட மீனினத்தைச் சுட்டாமல் பொதுவாக மீன், மீனினம் என்றும் கயல் என்றும் சுட்டி இப்பாடலடிகள் அமைந்துள்ளன. இதனை,

**"வாடப் பூவின் பொய்கைநாப்பன்**
**ஓடுமீன் வழியிற்"** **(நற்றிணை-16)**
**"ஆனாது அலைக்குங் கடல்மீன் அருந்தி"** **(மேலது-382)**

**"பழனப் பனமீனருந்த"** **(ஐங்குறுநூறு-70)**

**"இனமீ னிருங்கழி"** **(குறுந்தொகை-9,324)**

**"கடல்பாடழிய இனமீன் முகந்து"** **(அகநானூறு-30)**

**"நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய"** **(மேலது-46)**

**"மீன்முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை"** **(மேலது-186)**

எனும் பாடலடிகளால் அறியாலாம். மீனினமானது கயல் எனச் சுட்டப்படுவதை,

**"கயற்கணங் கலித்த பொய்கை ஊர"** **(நற்றிணை-230)**

**"கயலார் நாரை போர்விற் சேக்கும்"** **(ஐங்குறுநூறு-10)**

எனும் பாடலடிகளால் உணரலாம். மேற்கண்ட பாடலடிகளின் வாயிலாக கடல், கழிமுகம், பொய்கை ஆகிய இடங்களில் வாழும் தனித்த மீன்களையும் மீனினத் தொகுப்புகளையும் மீன், மீனினம், கயல், கயற்கணம் போன்ற சொற்களின் மூலமாக சங்க அகப்பாடல்கள் சுட்டுவதை அறியலாம்.

மீன் இனத்தின் வகைமை சுட்டாமல் பொதுவான பெயராகச் சுட்டும் முறைமையில் 'சிறுமீன்' என்றபதம் அமைவதைக் காணமுடிகின்றது. இது உடலளவில் சிறுத்த தோற்றங்கொண்ட மீனைக் காட்டுவதாக அமைவதை

**"உறுகழிச் சிறுமீன் முனையிற்"** **(குறுந்தொகை-296)**

**"நனையகாஞ்சிச் சினைய சிறுமீன்"** **(ஐங்குறுநூறு-1)**

**"பூத்தமாஅத்தப் புலாலஞ் சிறுமீன்"** **(மேலது-10)**

**"யறுகழிச் சிறுமீனா ரமாந்தும்"** **(மேலது-165)**

எனும் பாடலடிகள் காட்டுகின்றன. 'சினையசிறுமீன்' என்னும் பதம் 'சினையை உடையசிறுமீன்' எனப் பொருள்படுகின்றது. அதாவது சினையை உடைய ஈனுந்தன்மை வரப்பெற்ற சிறியமீன் என இதனை விளக்கலாம். முட்டை ஈனும் தன்மைவரப்பெற்ற சிறுமீன் என்பதால் முட்டையிடும் அளவிற்கு முதிர்ந்த சிறுமீன் என்பதை உணரலாம். இது சிறிய உடலமைப்பைக் கொண்ட தனித்த மீனினத்தைக் காட்டுவதாகத் தெரிகிறது. சிறுமீன் என்ற சொல்லைத் தவிர கழிமுகத்தில் வாழுந்தன்மை மற்றும் மருதநில நன்னீரில் வாழுந்தன்மை ஆகியன சுட்டப்பட்டுள்ளன. சரியாக இது எந்த மீனினம் என அறியுமாறில்லை.

**அயிரைமீன்**

அயிரைமீன் மிகச்சிறிய உருவமைப்பு கொண்டது. குளம், குட்டை, ஆறு போன்ற நன்னீர் நிலைகளில் இது காணப்படும். இம்மீனின் பெயர் நேரடியாகவே சங்க அகப்பாடல்களில் சுட்டப்பட்டுள்ளது.

**"இருஞ்சேற்று அயிரை தேரிய தெண்கழிப்**
**பூவுடைக் குட்டந் துழவுத் துறைவன்"** **(நற்றிணை-272)**

**"அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்"** **(குறுந்தொகை-128)**

**"நாரைநிரைபெயர்ந் தயிரை யாரும்"** **(மேலது-166)**

**"அயிரை பரந்தவந்தண் பழன";** **(மேலது-178)**

**"இருங்கழி மருங்கின யிரையாரும்"** **(ஐங்குறுநூறு-164)**

எனும் பாடலடிகளில் அயிரைமீனானது கடல்பகுதியிலும்,கழிமுகங்களிலும்,மருதநிலத்தின் பழனத்திலும் காணப்பட்டதைப் பதிவுசெய்கின்றன. இது நன்னீர்ப் பகுதிகளிலும் சாதாரணமாகக் காணப்படும் மீனினமாகும். இது நன்னீர்ப் பகுதியில் இருப்பதை ஒருபாடல் மட்டுமே பதிவுசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. "அயிலை"எனும் பெயரில் அகநானூறு இம்மீனைச் சுட்டுவதை,

**"குறுங்கண் அவ்வலைப் பயம்பாராட்டிக்**
**கொழுங்கண் அயிலை பகுக்குந் துறைவன்"** **(அகநானூறு-70)**

எனும் பாடலடியால் அறியாலம். சிறிய உருவைக் கொண்ட மீனாதலால் "குறுங்கண்" கொண்ட வலையைப் பயன்டுத்திப் பிடிக்கப்பட்டதை இப்பாடலடிகள் காட்டுகின்றன.

**ஆரல் மீன்**

கதிர் போன்ற கூரிய மூக்கினை உடைய ஆரல் மீனினை **"கதிர் மூக்குஆரல்" (மேலது-246)** என அகநானூறு சுட்டுகின்றது.

**"ஆர லருந்த வயிற்ற"** **(குறுந்தொகை-114)**

**"ஆர லார்கையஞ்சி றைத் தொழுதி"** **(கலித்தொகை-75)**

எனும் பாடலடிகளும் ஆரல் மீனைச் சுட்டுகின்றன. சங்க அகப்பாடல்களில் நெய்தலாகிய உவர் நீர்ப் பகுதிமற்றும் மருதமாகிய நன்னீர்ப் பகுதி ஆகிய இரு இடங்களிலும் இம்மீன் இடம்பெறுகின்றது.

**இறால் மீன்**

சங்க அகப்பாடல்களில் இறால் மீன் இறா, இறவு, இறால் என்ற பெயர்களில் சுட்டப்பட்டுள்ளது. இறால் மீனின் நிறம், வடிவம், வாழிடம் போன்றவை தெளிவுறச் சுட்டப்பட்டுள்ளன. இறால் மீன்களின் வாழ்விடம் பெரும்பான்மையும் உவர்நீர் வாழிடமாகிய கடலாகும். நன்னீர்ப் பகுதிகளிலும் இறால் காணப்படுவதுண்டு. இதனை "இறால் மீன்கள் பொதுவாக கடல் நீரில் வாழ்பவை. இவற்றில் தனிச் சிறப்பான ஒருவகை நன்னீரிலும் வாழும்;" (ச.முகமது அலி, இயற்கை செய்திகள் சிந்தனைகள், பக்கம்- 56) எனும் கருத்துதெளிவிக்கும். சங்க அகப்பாடல்களில் கடல், கழிமுகம், மருதம் மற்றும் குறிஞ்சிநிலத்தின் நன்னீர்ப் பகுதிகளில் வாழும் இறால் மீன்கள் சுட்டப்பட்டுள்ளன. பெரும்பான்மையும் கடற்பகுதி இறாமீன்கள் சுட்டப்பட்டுள்ளன. மருதநிலத்தில் வாழும் இறால் மீனை அகநானூற்றின் தொன்னூற்றாறு, இருநூற்று எண்பத்தாறாம் பாடல்களும் குறிஞ்சிநிலத்தின் இறாமீனை அகநானூற்றின் நூற்றைம்பத்திரண்டாம் பாடலும் காட்டுகின்றன. இறாலானது வளைந்த முதுகுப்புறத்தினையும் வளைந்தகால்களையும் கொண்ட உருவமைப்பைக் கொண்டது. இத்தன்மையினை முடங்கிறா, முடக்கால் இறவு எனச் சங்கஅகப்பாடல்கள் சுட்டுவதை,

**"முடிவலை முகந்த முடங்கிறா"** **(நற்றிணை-49)**

**"முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை"** **(மேலது-211)**

**"முடக்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை"** **(குறுந்தொகை-109)**

**"முடங்குபுற இறவோடினமீன் செறிக்கும்"** **(அகநானூறு-220)**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இறால் மீனின் தலையானது மெல்லியதாக முன்பாக நீட்டியது போல் இருப்பது "துய்த்தலை" (நற்றிணை-111, அகநானூறு-376) எனச் சுட்டப்பட்டுள்ளது. இவை இறாமீனின் பொதுவான உடலமைப்பினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. சிவந்த நிறமுடைய இறால் மீனை

**"சேயிறா வெறிந்தசி றுவெண் காக்கை"** **( நற்றிணை-31)**

**"பெருஞ்சேய் இறவின் துய்த்தலை"** **(மேலது-358)**

**"பெருங்கடல் பரப்பில் சேயிரால் நடுங்க"** **(அகநானூறு-60)**

எனும் அடிகள் சேயிறாஎன்றும் சேய் இறாஎன்றும் சுட்டுகின்றன. வெள்ளை நிறமுடைய இறாமீனை,

**"சிறுவெள் இறவின் குப்பை யன்ன"** **(மேலது-152)**

**"வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து"** **(மேலது-170)**

எனும் அகநானூற்றடிகள் 'வெள் இறா'எனச் சுட்டுகின்றன. சிவந்த நிறமுடைய இறால் மீன் வெண்மை நிறமுடைய இறால் மீன் என நிற அடிப்படையிலான இருவகை இறால் இனங்கள் சங்க அகப்பாடல்களில் சுட்டப்பட்டுள்ளன.

சங்க அகப்பாடல்களின் வழி கடல் பகுதிகளிலும், கழிமுகங்களிலும், பொய்கைகளிலும் வாழும் இறாமீன்கள் சுட்டப்பட்டுள்ளதையும், நிறத்தின் அடிப்படையிலான இருவகை இனங்களையும் அறியமுடிகின்றது.

**கெளிற்றுமீன்**

கெளிற்றுமீன் என்பது தற்காலத்தில் கெளுத்திமீன் எனச் சுட்டப்படுகின்றது. சங்க அகப்பாடல்களில் கெளிறு, கெடிறு என்ற பெயர்களில் சுட்டப்பட்டுள்ளது.

**"முள்ளெயிற்று பான்மகளின் கெடிறு சொரிந்த"** **(ஐங்குறுநூறு-47)**

**"இருங்கழி யினக்கெடிறாருத் துறைவ"** **(மேலது-167)**

**"சினைக்கெளிற் றார்கைய"** **(நற்றிணை-70)**

எனும் பாடலடிகளால் இதனை அறியாலம். கெளுத்திமீன்கள் பெரும்பான்மையும் நன்னீரில் வாழக்கூடியனவாகும். கழிமுகப் பகுதிகளிலும் இம்மீன்கள் காணப்பட்டதை ஐங்குறுநூறு பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**கெண்டைமீன்**

கெண்டைமீன் என்பது நன்னீரில் வாழும் மீன்வகையாகும். ஆறு,குளம்,குட்டை,ஏரிகளில் காணப்படும். மருதநிலத்தின் ஆழமானகுளத்தில் கெண்டைமீன் காணப்படுவதை,

**"குண்டு நீரிலஞ்சிக் கெண்டை கதூஉம்**
**தண்டுறை யூரன்"** **(குறுந்தொகை-91)**

எனும் குறுந்தொகைப் பாடலடி காட்டுகின்றது.

**"குருகுகொளக் குளித்த கெண்டையயல"** **(மேலது-127)**
**"கெண்டைபாய்தர வவிழ்ந்த"** **(ஐங்குறுநூறு-40)**

எனும் பாடலடிகள் கெண்டை மீனினைச் சுட்டியமைவதைக் காணமுடியும். தற்காலத்தில் மீன்வகைகளில் சுட்டப்படும் கட்லா, ரோகு, மிர்கால் ஆகியவை இக்கெண்டைமீன் இனங்களே ஆகும். மேலும் வெள்ளிக் கெண்டை, புற்கெண்டை போன்றவை வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பெற்ற கெண்டைமீன் வகைகளாகும்.

**கொழுமீன்**

சங்க அகப்பாடல்களில் சுட்டப்படும் 'கொழுமீன்' என்ற பதத்திற்கு உரையாசிரியர்கள் சில இடங்களில் கொழுத்தமீன் என்றும் கொழுவியமீன் என்றும் மீனின் உடல் வளர்ச்சியின் காரணப்பற்றி உடல் பெருக்க முற்றமீனைப் பொதுவாகக் குறிக்கும் வகையில் விளக்கம் கூறியுள்ளனர். ஆனால் "கொழுமீன்" என்பது தனித்த ஒருமீன் வகை என்பதை,

**"அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்"** **(அகநானூறு-60)**

எனும் அகநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

'கொழுமீன்தடி' என்பது 'கொழுமீனின் கருவாடு' என்று பொருள்படும். மீன் உயிருடன் இருக்கும் பொழுதோ அல்லது பிடித்த உடனோ அதன் சதைப்பற்று கருதி கொழுமீன் எனலாம். ஆனால் மீன் கருவாடாகிய பின்பு சதைப்பற்று சுத்தமாகச் சுண்டி வறண்டு போய் காணப்படும். அந்த நிலையில் அதனை 'கொழுமீன்' எனச் சதைப்பற்றுக் காரணமாகச் சுட்டுவது இயலாததாகும். அவ்வகையில் சதைப்பற்று வறண்டு கருவாடாகிய தடியைச் சுட்டும் போது 'கொழுமீன் தடி' எனச் சுட்டுவது மீனினத்தின் தனியொரு வகையாகிய கொழுமீனின் கருவாட்டை என்பது விளங்குகிறது. எனவே கொழுமீன் என்பது தனியொரு மீன்வகையே எனத் துணியலாம். கொழுமீனின் தலையில் நிணம் நிறைந்த இருக்கும் என்பது,

**"நெய்த் தலைக் கொழுமீன்"** **(நற்றிணை-291)**

எனும் நற்றிணையடியால் அறிவருகின்றது. சங்க அகப்பாடல்களில் கொழுமீன் பற்றிய செய்திகள் யாவும் நெய்தல் திணையில் வருவதால் கொழுமீன் கடலில் வாழும் மீன்வகை என்பது தெளிவாகின்றது.

**சுறாமீன்**

சுறாமீன் என்பது கடற்பகுதியில் வாழும் மீனினமாகும். சுறாமீன்கள் பெரிய உடலமைப்பினைக் கொண்டவை. இவை சிறியமீன்கள் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்களை உணவாக உண்பவை. சங்க அகப்பாடல்களில் சுறாமீனானது சுறா, சுறவு, கோட்டுமீன் என்ற பெயர்களில் வழங்கப்படுகின்றது.

**"கோட்சுறாவழங்கும் வாட்கேழ் இருங்கழி"** **(மேலது-78)**

**"வாள்வாய்ச் சுறவின் பனித்துறைநீந்தி"** **(அகநானூறு-187)**

**"கொடுந்திமிற் பரதவர் கோட்டும் னெறிய"** **(குறுந்தொகை-304)**

எனும் பாடலடிகள் சுறாமீனானது கழிமுகத்தில் இருத்தல், பரதவர் அதனைப் பிடித்தல் போன்ற செய்திகளைக் காட்டுகின்றது. சுறாமீனானது தன்னைப் பிடிக்க பரதவர் விரித்தவலையைக் கிழித்தகாட்சியை,

**"கோட்சுறாக் கிழித்தகொடுமுடிநெடுவலை"** **(அகநானூறு-340)**

**"கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின்**
**வலையுந் தூண்டிலும்"** **(நற்றிணை-207)**

எனும் சங்க அகஇலக்கியப் பாடலடிகள் காட்டுகின்றன. சங்கஅகப்பாடல்களில் மீன் இனங்களில் சுறாமீன் மிகுதியும் பேசப்பட்டுள்ளது. மனிதர்களைத் தாக்குதல், பிற உயிரினங்களைத் தாக்குதல் போன்ற செய்திகளும் காட்டடப்பட்டுள்ளன.

**பெருமீன்**

சங்க அகப்பாடல்கள் சிலவற்றில் 'பெருமீன்' எனும் பதம் சுட்டடப்பட்டுள்ளது. இதற்குச் சில உரையாசிரியர்கள் பெரிய மீன் என்று பொருளுரைத்துள்ளனர். ஆனால் இது கூறப்பட்டுள்ள விதம் பற்றியும் இதனைப் பரதவர் பிடிக்கும் முறைமை பற்றியும் 'பெருமீன்' என்பது திமிங்கிலத்தைச் சுட்டுகிறது என நிறுவுகிறார் பி.எல். சாமி (பி.எல்.சாமி,சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பக்கம் 431). சங்க அகப்பாடல்களில் பரதவர்கள் பெருமீனைப் கயிற்றின் நுனியில் கட்டடப்பட்ட எறியுளியைக்கொண்டு தாக்கிப்பிடிக்கும் முறைமை சுட்டிக்காட்டடப்படுகின்றது. இது திமிங்கிலத்தைப் பிடிக்கும் முறையாகும். தற்காலத்தில் இம்முறையிலேயே திமிங்கிலம் பிடிக்கப்பட்டு வருவதாகக் கூறுகின்றனர். திமிங்கலம் பிடிக்கப்படும் பொழுது அதன் குருதியால் கடலே மாறுபடுவதாகவும் சுட்டடப்பட்டுள்ளது. இதனை

**"குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்**
**எறியுளி பொருத ஏமுறு பெருமீன்**
**புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட"** **(அகநானூறு-210)**

**"கயிறு கடையாத்த கடுநடை எறிஉளித்**
**திண்திமில் பரதவர் ஒண்சுடர் கொளீஇ**
**நடுநாள் வேட்டம் போகி வைகறைக்**
**கடல்மீன் தந்து"** **(நற்றிணை-338)**

எனும் பாடலடிகள் காட்டுகின்றன. நெய்தல் நிலமக்கள் பெருமீனாகிய திமிங்கிலத்தை வேட்டையாடிய விதத்தையும். பண்டைய தமிழ் மக்கள் இதனை உணவாக உண்டனர் என்பதையும் இதனால் அறியமுடிகிறது.

**வரால் மீன்**

வரால் மீன் எனப்படும் ஒருவகை மீனினம் சங்க அகநூல்களான ஐங்குறுநூற்றிலும், அகநானூற்றிலும் சுட்டப்பட்டுள்ளது. இதனை,

**"வரால் செரிந்தவட்டியுண் மனையோள்" (ஐங்குறுநூறு-48)**

**"பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்து" (அகநானூறு-36)**

**"நாள்துறைப் பட்டமோட்டிருவராஅல்" (மேலது-196)**

**"தான்புனலடைகரைப் படுத்தவராஅல்" (மேலது-216)**

எனும் பாடலடிகளால் உணரலாம். மேற்கண்ட பாடலடிகள் யாவும் மருதத்திணைப் பாடல்களாக அமைந்திருப்பது, வரால் மீனினம் நன்னீரில் வாழ்வது என்பதைக் காட்டுகின்றது. "இதுநன்னீரில் வாழும் மீன்" (மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி,பக்கம்-613) எனும் இராசமாணிக்கனாரின் கூற்று இதனை உறுதிப்படுத்துகிறது.

**வாளை மீன்**

மீனினங்களுள் ஒன்றாய வாளைமீன் பற்றிய பதிவுகள் சங்க அகப்பாடல்களில் காணப்படுகின்றன. இதனை,

**"இருஞ்சுவல் வாளை பிறழும் ஊர" (நற்றிணை-400)**

**"கணைக்கோட்டு வாளை" (குறுந்தொகை-164)**

**"வாளை வெண்போத்து உணீஇய நாரைதன்" (அகநானூறு-276)**

எனும் பாடலடிகள் காட்டுகின்றன. வாளை மீனானது நீர்நாய்க்கு உணவாகும் தன்மையினை,

**"அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்**

**"வாளை நாளிரை பெறுஉ மூரன்" (குறுந்தொகை-364)**

**"பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்**

**வாளை நாளிரை பெறுஉ மூர" (ஐங்குறுநூறு-63)**

எனும் பாடலடிகளால் அறியலாம். வாளை மீனானது மருதத் திணையில் மருத நிலத்தின் பின்புலத்திலேயே சுட்டப்பட்டுள்ளது.

**"அறல்வார் நெடுங்கயத்து அருநிலை கலங்க**

**மாலிருள் நடுநாள் போகித் தன் ஐயர்**

**காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு" (அகநானூறு-126)**

எனும் அகநாநூற்று அடியில் நெடுங்கயத்தில் இருளில் சென்று ஐயர் தந்த வாளை எனவரும் செய்தி கடலில் பிடிக்கப்பட்டதாக இருக்குமோ? எனத் தோன்றுகிறது. வாளை மீன் கடலிலும் காணப்படும் என்பதால் அவ்வாறும் இருக்கக்கூடும். இப்பாலடிதவிர மற்ற அனைத்துப் பாடல்களிலும் ஐயத்திற்கிடமின்றி குளம், பழனம் என நன்னீர் மீனாகவே வாளை காட்டப்பட்டுள்ளது.

**நீர் நாய்**

சங்க அகப்பாடல்களில் நீர்நாய் பற்றிய செய்தி தெளிவுறக் காட்டப்பட்டுள்ளது. நீர்நாய் ஆறு, ஏரி, குளம், கழிமுகப் பகுதிகளில் வாழும் இயல்புடையது. மீன், நத்தை, நண்டு, மற்றநீர் விலங்குகளை உண்ணும்.

**“பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்**
**வாளை நாளிரை பெறூஉ மூர”** **(ஐங்குறுநூறு-63)**
**“அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்”** **(குறுந்தொகை-364)**
**“பொய்கை நீர்நாய் புலவுநாறு இரும்போத்து”** **(அகநானூறு-386)**

எனும் பாடலடிகளில் பொய்கையில் நீர்நாய் இருந்தது சுட்டப்பட்டுள்ளது. நீர்நாயின் முதுகில் மயிற்கற்றை வரிபோன்று இருப்பதை வரிப்புற நீர்நாய் எனும் தொடர் காட்டுகின்றது. தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம் கொடிவேரி பவானியாற்றுப் பகுதிகளில் இருபது வருடங்களுக்கு முன்னர் நீர்நாயைக் காணமுடிந்தது என்றும் தற்போது காணமுடிவதில்லை எனக் கூறுகின்றனர். அப்பகுதியினர் நீர்நாயை ‘மீனாய்’ எனச் சுட்டுகின்றனர்.

**முடிவுரை**

சங்க அகப்பாடல்களில் நீர்வாழ் விலங்குகள் என்ற நிலையில் சில மீனினங்கள் மற்றும் நீர்நாய் பற்றிய பதிவுகள் அமைந்துள்ளன. மீன்களுள் நன்னீரில் வாழும் மீன்கள் உவர்நீரில் வாழும் மீன்கள் என வாழிடப் பகுப்பின் அடிப்படையிலான இருவகை மீன்களும் சுட்டப்பட்டுள்ளன. மீனினங்களுள் அயிரை, ஆரல், இறால், கெளிறு, கெண்டை, கொழுமீன், சுறா, பெருமீன், வரால், வாளை ஆகிய மீனினங்கள் சுட்டப்பட்டுள்ளன. இம்மீனினங்களில் சிலநன்னீர் உவர்நீர் என இருவகை நீரிலும் வாழும் தன்மையவாய் உள்ளன. இத்தகைய வாழிட அடிப்படையிலான மீனினங்களை வகைப்படுத்தி அறிந்துகொள்ளும் அளவிற்கு சங்கத் தமிழர்கள் தெளிவான அறிவுடையவர்களாக விளங்கினர் என்பதைச் சங்க அகப்பாடல்கள்வழி உணரமுடிகின்றது. நன்னீர்நிலைகளில் அருகிவரும் நீர்வாழ் விலங்கான நீர்நாய் அதன் உடலமைப்பு சுட்டி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இத்தன்மைகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்கள் பல்லுயிரியத் தகவல் பொதிந்த களஞ்சியமாக விளங்குவதை அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 2012
2. சாமி பி.எல்., சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு, ஆகஸ்ட் 1970
3. சோமசுந்தரனார் பொ.வே. (உரை), ஐங்குறுநூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசத்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.., சென்னை - 600 018, 2009
4. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசத்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை 600 018, 2007

5. நாராயணசாமி ஐயர் அ. பின்னத்தூர், (உரை), நற்றிணை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசத்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை - 600 018, 2007
6. தமிழண்ணல். முனைவர் (உரை), குறுந்தொகை, கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 630307, முதற்பதிப்பு, ஏப்ரல் 2002.
7. முகமது அலி. ச., இயற்கை செய்திகள் சிந்தனைகள், இயற்கை வரலாறு அறக்கட்டளை, பொள்ளாச்சி - 642 103, இரண்டாம் பதிப்பு, 2015.
8. வேங்கடசாமி நாட்டார் ந.மு. நாவலர், (உரை), அகநானூறு களிற்றியானை நிரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசத்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்.. சென்னை 600 018, 2009.


## References


1. Rasamanikkanar M, Pathuppattu araichi, Sagithya Acadamy Veliyeedu, Chennai, Mudal pathippu, 2012
2. Samy P.L., Sanga ilakkiyathil Vilangina vilakkam, Tirunelveli thennindiya saivsithanda Nootpatippuk kalagam lit, Chennai, mudal pathippu, Aug 1970
3. Somasundaranar Po.Ve. (urai), Aingurunooru, Tirunelveli thennindiya saivsithanda Nootpatippuk kalagam lit, Chennai - 600 018, 2009
4. Nachinarkkiniyar (urai), Kalithogai, Tirunelveli thennindiya saivsithanda Nootpatippuk kalagam lit, Chennai – 600018, 2007.
5. Narayanasamy Ayyar A. Pinnathur (urai), Natrinai, Tirunelveli thennindiya saivsithanda Nootpatippuk kalagam lit, Chennai-600018
6. Tamilannal munaivar (urai), Kurunthogai, Kovilur madalayam, Kovilur-630 307, Mudatpathippu, April 2002
7. Muhamadu Ali Sa., Iyarkai seithigal sindanaikal, Iyarkai varalaru Arakkattalai, Pollachi - 642 103, Irandam pathippu, 2015
8. Vengadasamy nattrar Na.Mu. Navalar (urai), Agananooru, Tirunelveli thennindiya saivsithanda Nootpatippuk kalagam lit, Chennai 600018, 2009


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**வெள்ளியங்கிரி.க “ சங்க அக இலக்கியங்களில் நீர்வாழ் விலங்குகள்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 1, சனவரி 2023, பக். 41-50


**Cite this Article in English**


**Velliyangiri K “ Aquatic animals in Sangam Angam Literature”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 1, January 2023, pp. 41-50